# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 31, 2025

Weekly E-paper ● May 31, 2025




# கமல்ஹாசன் பேச்சும் கன்னடம் – தமிழ் மோதலும்!

சுப. வீரபாண்டியன்

## தலைவர் கலைஞர் அரசியல் உலகின் ஆர்க்கிமிடிஸ்!

நெல்லை பாபு

## ‘சூத்திரர்’ என்ற தகுதி..?

தலையங்கம்

## தமிழர் நீதி நிர்வாகம் தொன்மையும் தொடர்ச்சியும்

நூல் அறிமுகம் : வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2056, மே 31, 2025 Weekly E-paper ●May 31, 2025


# கமல்ஹாசன் பேச்சும் கன்னடம் – தமிழ் மோதலும்!

**சுப. வீரபாண்டியன்**





விரைவில் வெளிவரவிருக்கும் ஒரு தமிழ்த் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய நடிகர் திரு. கமல்ஹாசன் அவர்கள், தமிழ் குறித்தும், கன்னடம் குறித்தும் பேசிய சாதாரணமான ஒரு செய்தி, திட்டமிட்டே பெரிதுபடுத்தப்பட்டு, இன்றைக்குக் கன்னடர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான ஒரு பெரும் மோதலாக வெடிப்பதற்குரிய சதிச் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

இதனை, நடிகர் கமல்ஹாசனுக்கு எதிர்ப்பு என்று அல்லாமல், மக்கள் நீதி மையத்தின் தலைவர், திமுக கூட்டணியில் இடம் பெற்றிருப்பவர், மிக விரைவில் மாநிலங்களவை உறுப்பினராக (எம்.பி) ஆகப் போகிற ஓர் ஆளுமைக்கு எதிராகத் திட்டமிட்டுத் தூண்டி விடப்படுகிற கலவரம் என்று புரிந்து கொள்ள வேண்டும்! இது மொழிப் பிரச்சனை அன்று, கட்சிப் பிரச்சனை

தமிழில் இருந்து கன்னடம் வந்ததா, கன்னடத்தில் இருந்து தமிழ் வந்ததா என்னும் மொழியியல் ஆய்வில் முளைத்ததில்லை இந்தக் கலவரம்! தமிழ்நாட்டில் மிகுந்த வலிமையோடு விளங்கிக் கொண்டிருக்கும் திமுகவிற்கும், அதன் கூட்டணிக் கட்சியான காங்கிரசுக்கும் எதிராக, பாரதிய ஜனதா கட்சியும், அவர்களுக்கு மறைமுக ஆதரவாளர்களாகத் தமிழ்நாட்டில் இயங்கி வரும் போலித் தமிழ் தேசியர்களும் தூண்டி விடும் போராட்டம் இது!

கர்நாடகத்தில் கலவரத்தைத் தூண்டி, கமலஹாசனின் பதாகைகளை எல்லாம் கிழித்துக் கொண்டிருக்கிறவர்கள் யார் என்று கவனியுங்கள்.... பாஜகவின் கர்நாடக மாநிலத் தலைவர் விஜயேந்திரா தலைமையில் தான் அது நடந்திருக்கிறது. இங்கே - தமிழ்நாட்டில் - கன்னட மக்களை எதிர்த்தும், தாங்கள்தான் தமிழுக்காக உயிரையே கொடுக்கிறவர்கள் போலவும் வரிந்து கட்டிக்கொண்டு வெளியில் வந்து இந்த மோதலைப் பெரிதாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் யார் என்று பார்த்தால், அவர்கள் திராவிட இயக்கத்திற்கு எதிரான, பெ. மணியரசன் கும்பல்தான் ! அவர்கள்தான் சாட்டை சவுக்கையெல்லாம் எடுத்துக்கொண்டு இப்போது வெளியில் வந்திருக்கிறார்கள்.

இவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றால், தமிழை ஆதரிப்பது போல் ஒரு பக்கம் பேசிக்கொண்டு, பெரியாரை, கலைஞரை, இன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சரைத் தாக்குவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

"கன்னடத்தை விட தமிழ்தான் உயர்ந்த மொழி, தொன்மையான மொழி என்று ஸ்டாலினைச் சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்று சவால் விடுகிறார்கள். அப்படித் திமுக தலைவர் சொன்னால், கன்னடர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் மோதல் பெரிதாகி, பலர் உயிரிழப்பதற்கு கூட வழி உண்டாகும்! அதன் பிறகு, கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி திமுகவை எதிர்க்க வேண்டி வரும்! இந்தியா கூட்டணி உடைந்து போகும் ! இதுதான் பாஜகவினருக்கும், இங்கே உள்ள போலித் தமிழ் தேசியர்களுக்குமான பொதுவான விருப்பம்!

அவரவருக்கு அவரவர் தாய்மொழி உயர்ந்தது, எது தொன்மையான மொழி, எது சிறந்த மொழி என்று மோதிக்கொண்டிருக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை!

ஆடுகள் மோதிக்கொண்டால், கீழே கொட்டும் ரத்தத்தைக் குடிக்க இந்த ஓநாய்கள் தயாராக இருக்கின்றன! அதற்கு இரண்டு மாநில மக்களும் இடம் கொடுத்து விடக்கூடாது !

கமல்ஹாசன் கன்னட மொழியை இழித்தும், பழித்தும் எதுவும் பேசிவிடவில்லை. மொழியியல் ஆய்வாளர்களின் கருத்தையே அவர் சொன்னார். அதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் மறுக்கலாம்! அதற்காக மோதல், கலவரம், உயிரிழப்பு என்னும் நிலையை உருவாக்குவது யாருக்கும் நல்லதில்லை!

யார் செத்தால் என்ன, எவ்வளவு சொத்துகள் சேதம் அடைந்தால் என்ன, தாங்கள் தேர்தல் அரசியலில் வெற்றி பெற்றால் போதும் என்பது பாஜகவின் கருத்து! எதைச் சொல்லியாவது திமுகவை அழித்து விட வேண்டும் என்பது இங்கே இருக்கிற ஒரு கும்பலின் விருப்பம்! இரண்டு பேரும் சேர்ந்து இந்த நாடகத்தை இப்போது அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

இதுபோன்று கலவரங்களுக்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்று கருதியும், நம் மொழியை வாழ்த்தும்போது, பிற மொழிகளைப் பற்றித் தமிழ்த் தாய் வாழ்த்தில் குறிப்பிட வேண்டியதில்லை என்பதை எண்ணியும்தான், மனோன்மணீயம் பாடலிலிருந்து அந்தச் சில வரிகளை, அன்றே கலைஞர் எடுத்து இருக்கிறார் என்பது இப்போது புரிகிறது! அவருடைய தொலைநோக்குப் பார்வையைக் கூட இன்றைக்கு இங்கே ஒரு கும்பல், கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறது!

அவர்களின் ஆசைகளுக்குப் பலியாகி விடாமல், நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டிய கடமை நம் எல்லோருக்கும் இருக்கிறது! ●


# தலைவர் கலைஞர் அரசியல் உலகின் ஆர்க்கிமிடிஸ்!

## நெல்லை பாபு

"எனக்கு ஒரு ஆதாரம் கொடுங்கள், நான் உலகையே அசைத்துக் காட்டுகிறேன்" என்று சொன்ன கிரேக்க அறிவியல் அறிஞர் ஆர்க்கிமிடிஸைப் போல, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தனது சொல்லாலும் செயலாலும் மாபெரும் மாற்றங்களை உருவாக்கிய புரட்சியாளர் தலைவர் கலைஞர்.

அறிவியல் உலகில் ஆர்க்மிடிஸ் கண்டுபிடித்த நெம்புகோல் கொள்கையைப் போல, அரசியல் உலகில் கலைஞர் தனது பேச்சாற்றல், எழுத்தாற்றல், படைப்பாற்றல், போன்ற அறிவாயுதங்களால் சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தினார்.

ஆர்க்கிமிடிஸ் எப்படிக் கணிதம், இயற்பியல், பொறியியல் போன்ற துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளை செய்தாரோ, அதேபோல் தலைவர் கலைஞர் இலக்கியம், நாடகம், திரையுலகம், அரசியல் என பல துறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வந்தார். பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்காத போதிலும், கலை, இலக்கியம், உலக வரலாறு, அரசியல், தத்துவம் போன்ற துறைகளில் சிறந்து விளங்கிய கலைஞரை பற்றி எழுதப்பட்ட நூல்களும் ஆய்வேடுகளும் ஏராளம், ஏராளம்!



அவரது அறிவின் விரிவு மட்டுமல்லாமல், அதை எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் திறமையும் வியக்க வைக்கும். சிக்கலான அரசியல் கருத்துகளை கூட கதை, கவிதை, உவமை என பல வழிகளில் விளக்கி இருக்கிறார். இது தான் அவரை மற்ற தலைவர்களிடமிருந்து தனித்துக் காட்டியது.

ஆர்க்கிமிடிசின் நெம்புகோல் எப்படி சிறிய விசையால் பெரிய பொருளை நகர்த்த முடியும் என்பதை நிரூபித்ததோ, அதேபோல் கலைஞரின் பேச்சு, சிறிய வார்த்தைகளால் பெரிய மாற்றங்களை உருவாக்கியது. அவரது பேச்சில் இருந்த கவித்துவம், நகைச்சுவை, தர்க்கம், உணர்ச்சி ஆகியவை கேட்கிற பல்லாயிரக்கணக்கான மக்களை ஒரே நேரத்தில் அவர்பால் ஈர்த்தது. அவர் ஆற்றிய ஆயிரக்கணக்கான உரைகள் ஒவ்வொன்றும் சமூக மாற்றத்திற்கான விதைகளாக இருந்தன. அவரது பேச்சில் தமிழின் இனிமையும், கருத்தின் ஆழமும், கொள்கைப் பிடிப்பும் நகைச்சுவை உணர்வும் ஒன்றாக கலந்திருந்தன.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின் திமுக தலைமையை ஏற்ற கலைஞர், கட்சியை பலப்படுத்துவதற்காக எடுத்த முடிவுகள் அனைத்தும் கணித துல்லியத்துடன் இருந்தன. எதிர்க்கட்சிகளுடனான அணுகுமுறை, மத்திய அரசுடனான உறவு, அண்டை மாநில உறவு, பிற மாநிலக்கட்சிகளுடனான உறவு, என அனைத்திலும் சமநிலை காத்த கலைஞர், ஜனநாயகத்திற்கு சிக்கல் வரும்போதெல்லாம் அதிகார வர்க்கத்திற்கு எதிராக துணிச்சலோடு களத்தில் நின்றார்.

ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடிப்புகள் மனித குலத்திற்கு நன்மை பயந்ததைப் போல, கலைஞர் ஆட்சிக்கால கொள்கைகளும் திட்டங்களும் மக்கள் நலனுக்காக அமைந்தன.

சைக்கிள் ரிக்சா திட்டம், கண்ணொளித் திட்டம், குடிசைமாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், இலவச அரிசி விநியோகம், மாணவர்களுக்கு இலவச சைக்கிள் மற்றும் இலவச பேருந்து பயணம், கைம்பெண் உதவித்தொகை, முதியோர்ஓய்வூதியம், வண்ணத் தொலைக்காட்சி போன்ற திட்டங்கள் வெறும் அரசியல் வாக்குறுதிகள் அல்ல, மக்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை கொண்டு வந்த புரட்சிகரத் தொலைநோக்குத் திட்டங்கள்.

ஆர்க்மிடிஸ் புலிட்சர் என்ற கருவியால் கனமான பொருட்களை எளிதாக உயர்த்தினார். அதேபோல் பெண் உரிமை,பாலின சமத்துவம், மத நல்லிணக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தி கல்வி வாய்ப்பில் அவர் நிகழ்த்திய மாற்றங்கள் தான் தமிழ் சமூகத்தை இன்றும் வழிநடத்துகின்றன.

ஆர்க்மிடிசின் கண்டுபிடிப்புகள் காலம் காலமாக நிலைத்து நிற்பதைப்போல, கலைஞரின் அரசியல் நிலைப்பாடுகளும் ஆட்சிக்கால சாதனைகளும் காலத்தால் அழியாத வலிமை கொண்டவை.

ஆர்க்மிடிசின் கொள்கைகள் இன்றும் பொறியியல் கல்வியில் கற்றுக் கொடுக்கப்படுவதைப் போல, கலைஞரின் அரசியல் பாடங்களும் இன்றும் பலருக்கு வழிகாட்டுதலாக இருக்கின்றன.

கலைஞரின் வாழ்க்கை எளிய பின்னணியில் இருந்து வந்தவர்கள் கூட கடின உழைப்பு, தொடர் கல்வி, மக்கள் மீதான அன்பு ஆகியவற்றின் மூலம் உயர்ந்த இடத்தை அடைய முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

அவர் உருவாக்கிய அரசியல் மரபு இன்றும் தமிழ்நாட்டின் அரசியலை வடிவமைத்துக் கொண்டே இருக்கிறது.

**ஜூன் 3, தலைவரின் பிறந்தநாள்.** ●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ‘சூத்திரர்’ என்ற தகுதி..?

"நசூத்ராய மதிம் தத்யா" இந்த ஸ்லோகத்தின் பொருளென்ன? விளக்குகிறார் டி.எம்.நாயர், "சூத்திரன் படிக்கக் கூடாது" என்பதுதான் இதன் பொருள்.

அண்மையில் டில்லி பல்கலைக் கழகத்திற்குச் சென்று மாணவர்களுடன் பேசியிருந்தார் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி.

அவர் சொல்கிறார் டில்லி பல்கலைக் கழகங்கத்தில் 60 பேராசிரியர் இடங்களும், 30 துணைப் பேராசிரியர் இடங்களும் காலியாக இருக்கின்றன். அவற்றை நிரப்பப் போதுமானத் தகுதி உடைய பட்டியலின, பிற்படுத்தப் பட்ட, மிகப்பிற்படுத்தப் பட்ட 'தகுதி' யானவர்கள் கிடைக்கவில்லை என்று காலியாக வைத்திருக்கிறார்கள். ஒன்றிய அரசு உயர்கல்வி நிறுவனங்கள், ஐ.ஐ.டி போன்றவைகளிலும் இதே நிலை நீடிக்கிறது என்று அவர் கூறியிருக்கிறார்.

இது மனுவாதத்தின் புதிய நடைமுறை என்றும், இது சமூக நீதிக்கு இழைக்கப்படுப் துரோகம் என்று அவர் சாடியிருக்கிறார்.

"கல்விதான் சமத்துவத்திற்கான ஆயுதம்" என்கிறார் அண்ணல் அம்பேத்கர்.

ஆர்.எஸ்.எஸ் பரிவாரங்களின் முகமூடியாக இருக்கும் ஒன்றிய காவி மோடி அரசு மேலே சொல்லப்பட்ட ஸ்லோகத்தை நடைமுறைப் படுத்திட கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறது.

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குக் கல்வி நிதியாகத் தரவேண்டிய தொகை ரூபாய் 2,153 கோடி. அதை இதுவரை விடுவிக்கவில்லை ஒன்றியம். ஆகவே 6 சதவீதம் வட்டியுடன் 2, 201 கோடி ரூபாய் தமிழ்நாட்டுக் கல்விக்குத் தரவேண்டும் என்கிறது தமிழ்நாடு அரசு.

ஆனால் "தேசிய கல்வி கொள்கையின்படி மும்மொழி கொள்கையை அமல்படுத்தாவிட்டால் தமிழ்நாட்டுக்கு இந்த நிதியை ஒதுக்க முடியாது" என்று ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் சொல்கிறார்.

வேறு வழியில்லை உச்சநீதிமன்றத்தின் கதவைத் தட்டுவதைத் தவிர என்ற முடிவுக்கு வந்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

இப்பொழுது மேலே சொன்ன சுலோகத்தைப் படியுங்கள்.

"நசூத்ராய மதிம் தத்யா" - சூத்திரன் படிக்கக்கூடாது. இந்த வேலையைத்தான் பா.ஜ.க அரசு செய்துகொண்டு இருக்கிறது.

கொடுங்கோல் ஆட்சியை மக்கள் வீழ்த்துவார்கள், நேரம் பார்த்து!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



பேரவைத் தோழர்கள் திராவிடமணி, இளமாறன், அறம்மதி, அன்பு ஆகியோரின் ஏற்பாட்டில் 24-05-2025 ஞாயிறு அன்று காலை 11 மணி முதல் பகல் 1 மணிவரை இரண்டு மணிநேரம் இளமாறன் இல்லத்தில், சிறிய அளவில் ஒரு பயிற்சி வகுப்பு நடைபெற்றது. "கி.மு.1500 ஆரியர் வருகை முதல், கி.பி.1600 ஆங்கிலேயர் வருகை வரை" என ஒரு வரலாற்று வகுப்பை எழில்.இளங்கோவன் எடுத்தார். அடுத்த வகுப்பு, ஆங்கிலேயர் வருகையில் இருந்து தொடங்கும்.

# தமிழர் நிதி நிர்வாகம் தொன்மையும் தொடர்ச்சியும்

நூல் அறிமுகம்

**வெற்றிச்செல்வன்**



தமிழ்நாட்டின் 2000 ஆண்டுகாலப் பொருளாதார வரலாற்றைச் சான்றாவணமாக்கும் நோக்குடன் வெளிவந்துள்ளது “தமிழரின் நிதி நிர்வாகம் தொன்மையும், தொடர்ச்சியும்” என்ற நூல். தமிழ்நாடு அரசின் நிதித்துறை இதை வெளியிட்டு உள்ளது.

சங்க காலத்திலும், அதனைத் தொடர்ந்து பேரரசுகள் உருவான காலத்திலும் வரி வசூல் செய்யப்பட்ட முறை, நிதி மேலாண்மை எவ்வாறு நடைபெற்றது உள்ளிட்ட பல்வேறு செய்திகள் கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள் ஆகிய சான்றுகளின் துணை கொண்டு செறிவான முறையில் அமைந்த கட்டுரைகளைக் கொண்டுள்ளது இந்நூல். ஆங்கிலேயர் காலத்தில் செயல்படுத்தப்பட்டத் திட்டங்கள், இந்திய விடுதலைக்குப் பிறகு தமிழ்நாட்டில் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் (பட்ஜெட்) ஆகியவையும் பொருத்தமான கட்டுரைகள் மூலம் விளக்கப் பட்டுள்ளது.

சங்க கால இலக்கியங்களில் வரிவிதிப்பு, வசூலிப்பு பற்றிய குறிப்புகள் அதிகம் இல்லை என்றாலும் இவ்வகை நடவடிக்கைகள் இருந்துள்ளன. வணிகச் சரக்குகள் பெருவழிகளில் எடுத்துச் செல்லப்பட்ட போது ’உல்கு’ என்ற சாலை வரி விதிக்கப்பட்டுள்ளது. அரசு வருவாயில் முக்கிய மூன்று இனங்களாக நிலவரி, வணிகவரி, திறைப்பொருட்கள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகிறது திருக்குறள். "உறுபொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்" என்ற திருக்குறளுக்குக் கட்டுரை அளவிற்கு விளக்கம் தரப்பட்டுளது சிறப்பு.

தமிழர்களின் கடல்வழி வாணிகப் குறித்த மயிலை சீனி.வேங்கடசாமியின் கட்டுரை, அன்றைய காலகட்டத்தில் தமிழர்கள் வாணிகத்தில் கடல் கடந்து கோலோச்சியதைத் தெளிவுபடுத்துகிறது. அதேபோல, சோழப் பேரரசின் நீர் மற்றும் நில மேலாண்மைச் சிறப்புகளை கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி, சுப்பராயலு ஆகியோரின் கட்டுரைகள் விளக்குகின்றன. சுந்தர பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் ஆட்சி செய்தபோது, கடலில் கிடைக்கின்ற முத்துக்களில் பத்தில் ஒரு பகுதி அரசனுக்குக் கொடுத்துவிட வேண்டும். கடலில் முத்து எடுக்கும் ஆட்களைப் பெருமீன்கள் கடிக்காதவாறு மந்திர சக்தியால் கட்டுப்படுத்தும் மந்திரவாதிகளுக்கு இருபதில் ஒரு பகுதி தரப்பட வேண்டும் என்பது போன்ற மார்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் காணப்படும் செய்திகள் போன்றவற்றையும் இந்நூல் ஆங்காங்கே தொட்டுச் செல்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் இந்நூலில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. “தாமஸ் மன்றோ- விவசாயிகளின் நண்பன்” என்ற தலைப்பின்கீழ், வேளாண்மை சார்ந்த வரி மேலாண்மை விளக்கப்பட்டுள்ளது. பெரியாறு மற்றும் மேட்டூர் அணைகளின் வரலாறு, இரட்டையாட்சியின்போது வரியதிகாரப் பகிர்வு முறை ஆகியன குறிப்பிடத்தக்கவை.

”குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே தற்கால வரவு-செலவுத் திட்டம் அமைகிறது” என்ற பேரறிஞர் அண்ணாவின் வாசகங்களோடு தொடங்குகிறது விடுதலைக்குப் பிறகான செயல்திட்டங்கள் குறித்த பகுதிக்கான தொடக்கம். சமூகநீதியை மையப்படுத்திய வளர்ச்சியைச் சாத்தியமாக்கிட எடுக்கப்பட்ட முயற்சிகள் பல்வேறு கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன. மதிய உணவுத் திட்டம் தமிழகத்தின் கல்வித் தளத்தில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய திட்டம். அதனைச் செயல்படுத்துவதில் நேரிட்ட இடையூறுகள், தடைகள் ஆகியவற்றைச் சுவைபட விளக்குகிறது நெ.து.சுந்தரவடிவேலுவின் கட்டுரை. வளர்ச்சி தேவையானதுதான்; அதே நேரம் அந்த வளர்ச்சி வளங்குன்றா வளர்ச்சியாக இருக்க வேண்டும், எளியோர்களின், தொழிலாளர்களின் நலன் காக்கும் வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதைப் பல கட்டுரைகள் எடுத்தியம்புகின்றன.

சங்க காலம் முதல் சமூகநீதிக் காலம் வரையிலான தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிதி நிர்வாகச் சித்திரத்தைத் தீட்டும் நூல் இது என்ற அறிமுகவுரையுடன் தொடங்கியிருக்கும் இந்நூல், உண்மையாகவே அப்பணியைத் திறம்படச் செய்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையன்று. தமிழர் வரலாற்று ஆவணங்களில் ஒன்றாக இந்நூலைக் கொண்டு வந்துள்ள திராவிட மாடல் அரசுக்கும், நூலினை வடிவமைத்த ஆசிரியர் குழுவிற்கும் பாராட்டுகள்.

**புத்தகத்தின் பெயர் : தமிழர் நிதி நிர்வாகம் தொன்மையும் தொடர்ச்சியும்**
**வெளியீடு : தமிழ்நாடு அரசின் நிதித்துறை**